**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101956

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் Vigilance and Anti-Corruption Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 17/2022/AC/CB Date: நாள் 24.11.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act, 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 16.11.2022 Date to : நாள் வரை 22.11.2022
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.11.2022 Time : நேரம் 06.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Volume-II 24.11.2022 Time : நேரம் 06.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 16 Kms at South.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o. Assistant Engineer, TANGEDCO, Malumichampatty, Coimbatore.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Karthikeyan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S. Kaliyappan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 32/2022 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Software Engineer (g) Address : முகவரி Door No. 55/55A, Bharath Nagar Podanur Post, Coimbatore - 641023

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

(1) Tr. Subramanian, Assistant Engineer, TANGEDCO, Malumichampatty, Coimbatore.
(2) Tr. Shankar Ganesh, Foreman, TANGEDCO, Malumichampatty, Coimbat

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

GCP 240-34(Type 2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.
Separate Sheets attached herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 24.11.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.11.2022 @
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 07.10 hrs.

Name: பெயர் R. Ezhilarasi
Rank: நிலை Inspector of police No. எண் ........
Vigilance and Anti-Corruption
Coimbatore
24.11.2022.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

<u>**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**</u>

<u>**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/2022/AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**</u>

இன்று 24.11.2022-ம் தேதி வியாழக்கிழமை காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர், போத்தனூர், பாரத் நகர், கதவு எண்-55/55A, என்ற முகவரியில் குடியிருந்து வரும் காளியப்பன் என்பவரது மகன் K.கார்த்திகேயன் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சுசெய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோவை மலுமிச்சம்பட்டி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் உதவி மின் பொறியாளராக பணிபுரியும் திரு.சுப்பிரமணியன் என்பவர், புகார்தாரரது வீட்டு மனைக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்குவது சம்மந்தமாக போர்மேன் திரு.சங்கர் கணேஷ் என்பவரின் மூலம் லஞ்சமாக பணம் கேட்டது தெரியவந்தது. புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 24.11.2022-ம் தேதி 06.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.17/2022/AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரிகள் திரு.சுப்பிரமணியன் மற்றும் சங்கர்

கணேஷ் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், K.கார்த்திகேயன், வயது 32, S/o.S.காளியப்பன், க.எண்.55/55A பாரத் நகர், போத்தனூர் அஞ்சல், கோயம்புத்தூர்-641 023. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். அம்மா, நான் கோயம்புத்தூர் மாவட்டம் போத்தனூரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கீரணத்தத்திலுள்ள தனியார் நிறுவனத்தில் Software Engineer ஆக வேலை செய்து வருகிறேன். நான் கோயம்புத்தூர், மலுமிச்சம்பட்டி கிராமத்தில் உள்ள எம்.பி.ஜி. நகர், க.ச.எண் 266-ல் 1350 சதுரடியுள்ள சையிட் நெ.44 என்ற காலி மனையிடத்தினை விலைக்கு வாங்கி, அதனை கடந்த 27.10.2021-ம் தேதியன்று மதுக்கரை சார்பதிவு அலுவலகத்தில் ஆவண எண் 7747/2021 ஆக கிரையம் பெற்றேன். மேற்படி காலி மனையிடத்தில் வீடு கட்டுவதற்காக, நான் கடந்த 05.09.2022 ஆம் தேதி மலுமிச்சம்பட்டி EB ஆபீஸில் தற்காலிக மின் இணைப்பு பெறவேண்டி ஆன்லைனில் விண்ணப்பம் பதிவு செய்தேன். எனது விண்ணப்ப எண் 200032560922 1480 ஆகும். எனது விண்ணப்பத்தின் பேரில் என்னுடைய சையிட்டை மலுமிச்சம்பட்டி EB அலுவலகத்திலிருந்து கமர்சியல் இன்ஸ்பெக்டர் வந்து ஆய்வுசெய்துவிட்டு என்னிடம் எனது சைட்டுக்கு அருகில் ஒரு மின் கம்பம் போடவேண்டும் என்று சொன்னார். பின்னர் நான் ஆன்லைனில் எனது விண்ணப்பத்தினை Track செய்து பார்த்து அதிலிருந்த Link-ன் மூலம் விண்ணப்பத்தை பதிவுசெய்வது தொடர்பாக ரூ.2818-ஐ கடந்த 09.09.2022-ம் தேதியன்று ஆன்லைன் மூலமாக செலுத்தினேன். அதன் பின் நான் இருமுறை மலுமிச்சம்பட்டி EB அலுவலகம் சென்று தற்காலிக மின் இணைப்பு குறித்து விசாரித்தேன். EB ஆபீஸில் கமர்சியல் இன்ஸ்பெக்டரின் அறிவுரைப்படி Estimation தொகையாக ரூ.37,910/-ஐ கடந்த 19.09.2022-ம் தேதியன்று ஆன்லைனில் செலுத்தினேன். மேற்படி அனைத்திற்கும் நான் ஆன்லைன் ரசீது வைத்துள்ளேன். மேற்படி தொகைகளை செலுத்தியபிறகு நான் கடந்த 16.11.2022-ம் தேதி மலுமிச்சம்பட்டி EB ஆபீஸ் சென்று AE திரு.சுப்பிரமணியன் அவர்களை சந்தித்து தற்காலிக மின் இணைப்பு குறித்து கேட்டபோது அவர் அனைத்தும் ரெடியாகிவிட்டதெனவும் தற்காலிக மின் இணைப்பு கொடுப்பதற்கு தனக்கு தனியாக

பணம் கொடுக்கவேண்டியிருக்கும் எனவும் எவ்வளவு தொகை என்பதை மின்கம்பம் அமைத்த பின்னர் தெரிவிப்பதாகவும் சொன்னார். நான் கடந்த 19.11.2022 ஆம் தேதி சனிக்கிழமை சைட்டில் இருந்தபோது சுமார் 12.30 மணியளவில் போர்மேன் திரு.சங்கர்கணேஷ் சைட்டிற்கு வந்து என்னிடம் கம்பம் நடவரப்போறாங்க என்றும், கம்பம் நடும் வேலை முடிந்தவுடன் AE அவர்கள் என்னிடமிருந்து ரூ.7,000/-ஐ வாங்கிட்டு வரச்சொன்னார் என்றும் பணத்தை ரெடி பண்ணிவைத்துக்கொள்ளுங்க என்று சொல்லிவிட்டு போய்விட்டார். அவர் சொன்னது போலவே அன்று மாலை மலுமிச்சம்பட்டி EB ஆபீஸிலிருந்து வந்து மேற்படி எனது சைட்டில் ஒரு மின்கம்பம் அமைத்தார்கள். மின் கம்பம் அமைத்து முடித்தவுடன், போர்மேன் சங்கர்கணேஷ் என்னை, எனது சைட்டிற்கு அருகிலிருந்த டீ கடைக்கு அழைத்துச்சென்று, என்னிடம் AE கேட்ட பணம் ரூ.7,000/-ஐ கொடுக்கும்படி கேட்டார். நான் எதற்கு அவ்வளவு பணம் என்று கேட்டேன். அதற்கு போர்மேன் சங்கர்கணேஷ், லேபர் சார்ஜ்க்காக என்று சொன்னார். நான் அரசுக்கு கட்டவேண்டிய பணத்தை எல்லாம் முன்பே கட்டிவிட்டதாக சொன்னேன். அதற்கு போர்மேன் சங்கர்கணேஷ், AE திரு.சுப்பிரமணியன் அவர்கள்தான் ரூ.7,000/-த்தை என்னிடம் கேட்கசொன்னார் என்றும் அதுகுறித்து AE அவர்கள் என்னிடம் எதுவும் சொல்லவில்லையா என்றும் கேட்டுவிட்டு பணம் குறித்து AE அவர்களிடமே கேட்டுக்கொள்ளுமாறு தெரிவித்து, போர்மேன் சங்கர்கணேஷ் அவருடைய செல்போனிலிருந்து AE திரு.சுப்பிரமணியன் அவர்களுக்கு போன் செய்து எனது பெயரை சொல்லி மின்கம்பம் நட்டுவிட்டதையும் தெரிவித்து என்னிடம் செல்போனை கொடுத்து AE திரு.சுப்பிரமணியன் அவர்களிடம் பேசச்சொன்னார். நான் போர்மேன் சங்கர்கணேஷின் செல்போனில் AE திரு.சுப்பிரமணியன் அவர்களிடம் பேசியபோது அவர் என்னிடம் ரூ.7,000/-ஐ சங்கர்கணேசிடம் கொடுக்குமாறு சொன்னார். அதற்கு நான் AE அவர்களிடம் எதற்காக அந்த பணம் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் மின் இணைப்பு தருவதற்காக ஏற்கனவே சொன்னபடி தன்னை கவனிக்க வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் ஏதாவது குறைத்துக்கொள்ள முடியுமா சார் என்று கேட்டபொழுது AE திரு.சுப்பிரமணியன் அவர்கள் சரி ரூ.5,000/- கொடு என்று சொன்னார். அதற்கு நான் அப்போது அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னேன்.

அதற்கு AE திரு.சுப்பிரமணியன் என்னிடம் இருப்பதை போர்மேன் சங்கர்கணேஷிடம் கொடுக்குமாறும் மீதியை திங்கள் கிழமை அவரது அலுவலகத்திற்கு வந்து கொடுக்குமாறும், பணம் கொடுத்தால் தான் மீட்டர்பொருத்தி மின் இணைப்பு கொடுப்பேன் என்று சொல்லி போனை சங்கரிடம் கொடுக்குமாறு சொன்னதால் நான் போனை அவரிடம் கொடுத்துவிட்டேன். போர்மேன் திரு.சங்கர்கணேஷ் AE-யிடம் போன் பேசிவிட்டு திங்கட்கிழமை AE அவர்களை பார்த்து பணத்தை கொடுத்துவிடு என்று சொல்லிவிட்டார். பின்னர் 21.11.2022 ஆம் தேதி திங்கட்கிழமை மலுமிச்சம்பட்டி EB ஆபீஸிலிருந்து என்னை அழைத்து மீட்டரை வாங்கிச்செல்லுமாறு தெரிவித்தனர். அன்று எனக்கு வேலையிருந்ததால் நான் அங்கு செல்லவில்லை. மீண்டும் அடுத்தநாள் 22.11.2022 ஆம் தேதி என்னை மலுமிச்சம்பட்டி EB ஆபீஸிலிருந்து அழைத்து மீட்டரை வாங்க திங்கட்கிழமை வராததால், மின் இணைப்பு வழங்கியது போல ஆன்லைனில் Update செய்துவிட்டதாக தெரிவித்துவிட்டனர். நான் ஆன்லைனில் எனது விண்ணப்பத்தை Track செய்து பார்த்தபோது Service connection effected and application Closed *consumer number assigned 032560012045 என்று இருந்தது. ஆனால் எனக்கு* மின் இணைப்பு வழங்காமல் இருந்ததாலும், எனது விண்ணப்பத்தை Close செய்துவிட்டதாக ஆன்லைனில் வந்ததாலும், இது குறித்து விசாரிக்க நான் அன்று மாலை சுமார் 4.30 மணிக்கு மலுமிச்சம்பட்டி EB ஆபீசுக்கு சென்றபோது அங்கிருந்த பேர்ர்மேன் திரு.ரவி அவர்களை பார்த்தேன். அப்போது அவர் எல்லாம் ரெடியாகிவிட்டது என்று சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்குவதற்காக ஒரு நோட்டை எடுத்தார். அதற்குள் AE திரு.சுப்பிரமணியன் அவர்கள் என்னை அழைத்து என்னிடம் ஏன் இன்னும் நான் கேட்ட பணத்தை கொடுக்கல, இப்ப பணத்தை கொடுத்துட்டு போ என்று கறாராக சொல்லிவிட்டார். அதற்கு நான் என்னிடம் பணம் இல்லை என்றும், அடுத்த நாள் என்னுடைய சொந்த வேலையாக திண்டுக்கல் வேடசந்தூர் செல்லவேண்டும் என்றும் சொன்னேன். அதற்கு AE அவர்கள் அன்று மாலை 6 மணி ஆனாலும் பரவாயில்லை, பணம் எடுத்துட்டு வந்து கொடு என்றும், நான் இல்லைனா போர்மேன் சங்கரிடம் தகவல் தெரிவித்துவிட்டு பணத்தை கொடுத்துட்டு போ அடுத்த நாள் மீட்டர் பொருத்தி சர்வீஸ் கொடுத்துவிடுவதாகவும்

சொன்னார். நானும் வேறு வழியில்லாமல் சரிஎன்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் திண்டுக்கல் வேடசந்தூர் போகும் விசயத்தை போர்மேன் திரு.சங்கர்கணேஷிடம் போன்மூலமாக தெரிவித்தேன். அதற்கு அவரும் சரியென்று சொல்லிவிட்டார். அதன்பிறகு நான் திண்டுக்கல் வேடசந்தூர் சென்று விட்டேன். AE திரு.சுப்பிரமணியன் அவர்கள் கேட்டபணம் ரூ.5,000/-த்தை நான் கொடுக்காததால் எனக்கு இதுவரை மீட்டர் பொருத்தி மின் இணைப்பு வழங்கவில்லை. மேலும் நான் யோசித்து பார்த்ததில் எனது சைட்டுக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்குவதற்காக AE திரு.சுப்பிரமணியன் அவர்களுக்கு ரூ.5,000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே எனது வீட்டு மனைக்கு தற்காலிக மின் இணைப்பு வழங்க ரூ.5,000/- லஞ்சம் கேட்ட மலுமிச்சம்பட்டி EB ஆபீஸின் AE திரு.சுப்பிரமணியன் மற்றும் போர்மேன் திரு.சங்கர்ணேஷ் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd.XXXXX 24.11.2022. Respected Madam, Received the complaint on 24.11.2022 at about 06.00 hrs. sd.XXXXX, Inspr., V&AC, CBE 24/11/2022. Respected Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.17/2022/AC/CB, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 24.11.2022 at about 06.30 hrs. sd.XXXXX Inspr., V&AC, CBE. 24/11/2022. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(R.எழிலரசி) 24/11/2022

காவல் ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

கோயம்புத்தூர்.